# பள்ளி மாணவர்களுக்கு மெட்ரோ சார்பில் போட்டி தேர்வு

■ சென்னை

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று பள்ளி மாணவர்களுக்கான போட்டி தேர்வு நடைபெற்றது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் பள்ளி மாணவர்களுக்கான போட்டி தேர்வுகளை தமிழ் மற்றும் ஆங்கில வழியில் நடத்தியது. இந்த தேர்வில் மாநில கல்வி வாரியம், மெட்ரிகுலேஷன் மற்றும் சிபிஎஸ்இ பிரிவுகளில் பயிலும் 2000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.